**சார்பு நீதிமன்றம், திருத்துறைப்பூண்டி**

**MCOP. 217/2023**

2026 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 12 ஆம் நாள் வியாழன் கிழமை நீ.ம.சா.1 இந்திய சாட்சி சட்டத்தின் கீழ் திரு.த.பாரதி, பலகை எழுத்தர் நிலை –2 அவர்களால் சாட்சியிடம் சத்திய பிரமாணம் செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர்: | மருத்துவர்.சுமதி | க/பெ.: | மாறன் |
| கிராமம்: | திருவாரூர் | தாலுக்கா: | திருவாரூர் |
| மதம்: | இந்து | தொழில்: | பேராசிரியர், மகப்பேறு மருத்துவ துறை திருவாரூர் அரசு மருத்துவக்கல்லூரி மற்றும் மருத்துவமனை. |
| வயது: | 50 | முகவரி: | திருவாரூர் |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of – 1873 on day of 12.03.2026

<u>**முதல் விசாரணை:–**</u>

நான் தற்போது பேராசிரியர், மகப்பேறு மருத்துவத்துறை திருவாரூர் அரசு மருத்துவக்கல்லூரி மற்றும் மருத்துவமனையில் பணிபுரிந்து வருகிறேன். நீதிமன்றத்திலிருந்து அனுப்பட்ட அழைப்பாணையின் பேரில் ஆவணங்களின் அடிப்படையில் சாட்சியம் அளிக்கிறேன். மனுதாரர் அபீப் ரஹமான் என்பவர் மருத்துவ குழுமத்திற்கு சான்றிதழ் வேண்டி 06.01.2025 அன்று ஆஜரானார். மனுதாரரரை பரிசோதனை செய்து விசாரணை செய்ததில் சாலை விபத்தில் காயம் ஏற்பட்டதாக சொன்னார். நான் மனுதாரரரை பரிசோதனை செய்வதற்காக எலும்பு முறிவு மருத்துவரிடம் சிகிச்சைக்காக அனுப்பி வைத்தேன். பின்னர் மனுதாரரரை எலும்பு முறிவு மருத்துவர் பரிசோதனை செய்து மனுதாரருக்கு 4

ஆண்டுகளுக்கு முன்பாகவே ஆப்ரேஷன் செய்யப்பட்டுள்ளது என்றும், தற்பொழுது விபத்தினால் ஏற்பட்ட காயம் குணமடைந்துவிட்டதாகவும், லேசாக வலி இருப்பதாக தெரிவித்து அவருக்கு ஏற்பட்ட ஊனம் 5 சதவீதம் என கருத்து தெரிவித்து எனக்கு அனுப்பி வைத்தார். மேலும் எலும்பு முறிவு மருத்துவர் மனுதாரரரை 1 ஆண்டு கழித்து மீண்டும் பரிசோதனை செய்ய வர வேண்டும் என அறிக்கையில் தெரிவித்துள்ளார். எலும்பு முறிவு மருத்துவர் வழங்கிய கருத்துரு அடிப்படையில் மனுதாரரருக்கு ஏற்பட்ட ஊனம் 5 சதவீதம் என மருத்துவகுழுமத்தால் சான்றிதழ் வழங்கப்பட்டுள்ளது. அந்த சான்றிதழிலில் உள்ள சேர்மேன் என கையெழுத்து போட்டுள்ளது என்னுடைய கையெழுத்துதான் அந்த சான்றிதழ் **சா.சா.ஆ.1** ஆகும்.

**<u>மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை:–</u>**

மருத்துவக்கல்லூரி மற்றும் மருத்துவமனையில் அனைத்து உபகரணங்களும் உள்ளது என்று சொன்னால் சரிதான். நான் முதல் விசாரணையில் குறிப்பிட்டுள்ள எலும்பு முறிவு மருத்துவர் இன்றைய தினம் நீதிமன்றத்திற்கு வரவில்லை. ஊனச்சான்றிதழ் வழங்கும்போது கவனமாக செயல்படவேண்டும். நான் மனுதாரரரை ஊனச்சான்றிதழ் வழங்கும்போது நேரடியாக பார்த்தேனா என்றால் பார்த்துதான் சான்றிதழ் கொடுத்தேன். விபத்து ஏற்படும் போது ஊனத்தின் அளவும், பின்னர் மாறுபடவும் வாய்ப்புள்ளது. என்னிடம் காட்டப்படும் ம.சா.ஆ.3 ஆவணம் திருவாரூர் மருத்துவகல்லூரி

மருத்துவமனையில் வழங்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் ம.சா.ஆ.2 ஆவணத்தில் திருவாரூரில் உள்ள அரசு மருத்துவமனையில் வழங்கிய ஆவணத்தில் இடது தொடைபகுதியில் வீக்கம், உருக்குலைந்த நிலை என்றும், கால் பகுதியில் இரத்த ஓட்டம் உள்ளதாக குறிப்பிட்டுள்ளார். நீதிமன்றத்திலிருந்து ஊனசான்றிதழ் பெற வரும் பொழுது எங்கள் மருத்துவமனையில் எக்ஸ்ரே எடுக்கலாம் என்றால் தேவைப்பட்டால் எடுக்கலாம். சா.சா.ஆ.1 ஆவணத்தில் மனுதாரருக்கு என்னென்ன காயங்கள் ஏற்பட்டுள்ளது குறித்து சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். மனுதாரருக்கு அறுவைசிகிச்சை செய்யப்பட்டுள்ளதா, பிளேட் பொருத்தப்பட்டுள்ளதா அவை நீக்கப்பட்டுவிட்டதா என்ற விவரம் தெரியுமா என்றால் அறுவைசிகிச்சை செய்யபட்ட விவரம் எனக்கு தெரியும். மற்ற விவரங்கள் எனக்கு தெரியாது. ஸ்குரு பொருத்தப்பட்டதாக சொல்லியுள்ளார். மனுதாரர் திருவாரூர் அரசு மருத்துவமனையில் தான் அறுவைசிகிச்சை செய்துள்ளார் என்றால் சரிதான். ஏற்கனவே மனுதாரர் சிகிச்சை பெற்று வந்ததற்கான மருத்துவ ஆவணங்களை நான் பார்க்கவில்லை. மனுதாரர் மருத்துவமனைக்கு வந்ததிலிருந்து பரிசோதனை செய்து சான்று அளிக்கப்படும் வரை அவர் கொடுத்துள்ள விவரங்களை தெரிந்து கொள்ள கடமைப்பட்டவர் என்றால் சரிதான். நான் நீதிமன்றத்திற்கு மனுதாரர் சம்மந்தப்பட்ட வழக்கிற்காகதான் சாட்சி சொல்ல வந்தேன் என்பது தெரியும். சா.சா.ஆ.1–ல்

எந்தெந்த ஆவணங்கள் பார்க்கப்பட்டது, மருத்துவ ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டது என்ற விவரம் இல்லை என்றால் சரிதான். எங்களால் வழங்கப்பட்ட ஊனச்சான்று மறுஆய்வு செய்வதற்கு வழிவகையுள்ளது. மனுதாரருக்கு விபத்திற்கு முன்பாக உள்ள செயல்பாட்டிற்கும் விபத்திற்கு பிறகு உள்ள செயல்பாட்டிற்கும் மாறுபாடு உள்ளது என்று சொன்னால் உள்ளது. என்னிடம் காட்டப்படும் மருத்துவ நோட்டில் 19.01.2021 முதல் 09.02.2021 வரை மருத்துவ சிகிச்சை உள்நோயாளியாக பெற்றதாகவும் 03.02.2021–ல் அறுவைசிகிச்சை செய்ததாகவும் உள்ளது என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் நோட்டு மனுதாரரரை திருவாரூர் மருத்துவனையிலிருந்து டிஸ்சார்ஜ் செய்யப்பட்டதற்கான டிஸ்சார்ஜ் சம்மரி என்றால் சரிதான். அது **ம.சா.ஆ.8** ஆகும். ஆர்தோ டாக்டர் வழங்கிய ஊனத்தை ஊர்ஜிதம் செய்கிறேன். நான் மறுஆய்வு செய்வதற்கு அதிகாரம் உள்ளது. ஆர்த்தோ டாக்டர் ஏற்கனவே உள்ள ஆவணங்களை பார்த்துள்ளார். நான் ஏற்கனவே மனுதாரருக்கு சிகிச்சை அளித்த ஆவணங்களை கொண்டுவரவில்லை. மேற்படி ஆவணங்களை பார்க்கவில்லை. மனுதாரர் சிகிச்சை பெற்ற ஆவணங்களை நீதிமன்றதிற்கு கொண்டு வர தயாராகவுள்ளோம். பாதிக்கப்பட்ட மனுதாரருக்கு அன்றைய தினம் என்ன பரிசோதனை செய்தார்கள் என்றால் எனக்கு தெரியாது. மேற்கொண்டு விசாரிக்கவேண்டும் என்றால் எலும்பு முறிவு மருத்துவரை தான் விசாரிக்க வேண்டும். அன்றைய தினம் என்ன பணியில் இருந்தேன் என்றால்

மருத்துவக்குழுவும், மற்றும் மகப்பேறு மருத்துவமனையில் பணியில் இருந்தேன். பாதிக்கப்பட்ட மனுதாரரை மீண்டும் மருத்துவ பரிசோதனை செய்யவேண்டுமென நீதிமன்றத்தில் உத்தரவிட்டால் நாங்கள் தயாராக உள்ளோம். அன்றைய தேதியில் மனுதாரரரை சரியான முறையில் சரிசோதனை செய்யவில்லை என்றும், மனுதாரருக்கு அளிக்கப்ட்ட சிகிச்சைக்கான ஆவணங்களை பரிசீலனை செய்யாமலும், சான்றிதழ் வழங்கியுள்ளோம் என்று சொன்னால் சரியல்ல. நான் வழங்கிய ஊனச்சான்றிதழ் ஏற்றுக்கொள்ள கூடியதல்ல என்று சொன்னால் சரியல்ல. மறுஆய்வுக்கு உட்படுத்தவேண்டும் என்று சொன்னால் நீதிமன்றம் உத்தரவிட்டால் மறுஆய்வு செய்து சான்றிதழ் வழங்களாம்.

<u>1, 2 எதிர்மனுதாரர்கள் தரப்பில் குறுக்கு விசாரணை;–</u>

திருவாரூர் மருத்துவகல்லூரி மற்றும் மருத்துவமனையில் உள்ள மருத்துவ குழுமம் என்பது சாலை விபத்தில் காயம் பட்ட நபருக்கு ஏற்பட்ட ஊனத்தின் தன்மை குறித்து சான்றிதழ் வழங்க அமைக்கப்ட்டது என்றால் மற்ற பணிகளும் உண்டு. நீதிமன்றத்தால் அனுப்பட்ட மனுதாரருக்கு ஏற்பட்ட காயத்தின் தன்மை குறித்து தற்போது உள்ள ஊனத்தின் தன்மை குறித்து மதிப்பீடு செய்ய எக்ஸ்ரே எடுத்து அதன்படி அவருக்கு ஏற்பட்ட ஊனத்தின் தன்மையை அனுசரித்து ஊனத்தின் தன்மையை அளவீடு செய்வோம் என்றால் தேவைப்பட்டால் எக்ஸ்ரே எடுத்து சான்றிதழ் வழங்குவோம். இந்த மனுவில் கண்ட மனுதாரருக்கு பரிசோதனை செய்து ஆய்வு செய்த பிறகு தான் சான்றிதழ் வழங்கியுள்ளேன் என்றால் சரிதான். எனது

மருத்துவ பரிசோதனை படி தற்போது மனுதாரருக்கு ஏற்பட்ட ஊனத்தின் தன்மை 5 சதவீதம் என சான்றிதழ் வழங்கியுள்ளேன் என்றால் சரிதான்.

**<u>மறுவிசாரணை;– இல்லை</u>**

Typed down to my dictaion, in my Presence and hearing, and under my personal direction and Superintendence and admitted by the witness to be correct.

Subordinate Judge,
Thiruthuraipoondi.